ஆட்சித்தமிழ் ஐ.ஏ.எஸ் அகாடெமி

RAGS/2022

Question Booklet No:

10

பதிவு எண் | | | | | | | | | | |

2022

# பொதுத் தமிழும் பொது அறிவும்
# (மாதிரி வினாத்தாள் - 10)

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு: 200 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. பகுதி - அ வில் குறைந்தபட்ச மதிப்பெண் (40% அதாவது 60 மதிப்பெண்) பெறாத தேர்வர்களின் பகுதி - ஆ விற்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. பகுதி - அ வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் பகுதி ஆ-வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மட்டும் தரவரிசை பட்டியலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
4. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
5. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
6. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
8. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
9. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
10. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
11. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
12. கேள்வி வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி - ஆ) ஆங்கில வடிவே இறுதியானது.
13. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SPACE FOR ROUGH WORK

1. பொருத்துக: (தொழில்)

(a) குறிஞ்சி - 1. வழிப்பறி
(b) முல்லை - 2. தேனெடுத்தல்
(c) மருதம் - 3. ஏறு தழுவுதல்
(d) நெய்தல் - 4. களை பறித்தல்
(e) பாலை - 5. மீன் பிடித்தல்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 5 | 3 |
| (B) | 5 | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 5 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 4 | 5 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

2. இலக்கணம் எத்தனை வகைப்படும்?
(A) நான்கு
(B) ஐந்து
(C) மூன்று
(D) ஆறு
(E) விடை தெரியவில்லை

3. குறில் எழுத்துகள் யாவை?
(A) அ, ஆ, இ, ஈ, உ
(B) ஆ, ஈ, ஏ, ஓ
(C) அ, ஓ, ஔ, ஐ
(D) அ, இ, உ, எ, ஒ
(E) விடை தெரியவில்லை

4. நெடில் எழுத்துகள் யாவை?
(A) அ, இ, உ, எ, ஒ
(B) ஆ, இ, ஔ, ஐ, உ
(C) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ
(D) அ, ஆ, இ, ஊ, ஏ
(E) விடை தெரியவில்லை

5. குறுகிய ஓசையுடைய எழுத்துகள் ......
(A) நெடில் எழுத்துகள்
(B) குறில் எழுத்துகள்
(C) உயிர்மெய் எழுத்துகள்
(D) ஆய்த எழுத்துகள்
(E) விடை தெரியவில்லை

6. வந்தான் மன்னன் என்பது எவ்வதைத் தொடர்?
(A) எழுவாய்த் தொடர்
(B) அடுக்குத் தொடர்
(C) வேற்றுமைத் தொடர்
(D) வினைமுற்றுத் தொடர்
(E) விடை தெரியவில்லை

7. தன்வினைத் தொடரைக் கண்டறிக
(A) அப்துல் நேற்று வரவழைத்தான்
(B) அப்துல் நேற்று வந்தான்
(C) வந்தான் நேற்று அப்துல்
(D) வரவழைத்தான் அப்துல் நேற்று

(E) விடை தெரியவில்லை

8. செய்தித் தொடரைக் கண்டறிக
(A) என் அண்ணன் நாளை வருவான்
(B) நாளை வருவான் என் அண்ணன்
(C) என் அண்ணன் வருவான் நாளை
(D) வருவான் என் அண்ணன் நாளை
(E) விடை தெரியவில்லை

9. கூட்டு வினைக்குப் பொருத்தமான ஒன்றைத் தேர்வு செய்க.
(A) தனி வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள்
(B) கூட்டு வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள்
(C) துணை வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள்
(D) முதல் வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள்
(E) விடை தெரியவில்லை

10. சரியான துணைவினையத் தேர்வு செய்க.
(A) பானை நான்கு படி அரிசி கொள்ளும்
(B) நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை
(C) புத்தகம் மேசையில் இருக்கிறது
(D) நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன்
(E) விடை தெரியவில்லை

11. ‘வள்ளுவர் பெரும் புகழை உடையவர்’ இத்தொடர் ________ பொருளைக் குறிக்கிறது.
(A) ஒத்தல்
(B) உடைமை
(C) ஆக்கல்
(D) அடைதல்
(E) விடை தெரியவில்லை

12. ‘தலையின் இழிந்த மயிர்’ இத்தொடரில் ________ வேற்றுமை பயின்று வந்துள்ளது.
(A) இரண்டாம்
(B) முதல்
(C) மூன்றாம்
(D) ஐந்தாம்
(E) விடை தெரியவில்லை

13. பொருத்துக:
a) சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது — 1. ஏழாம் வேற்றுமை
b) நண்பனது கை — 2. இரண்டாம் வேற்றுமை
c) இரவின்கண் மழை பெய்தது — 3. மூன்றாம் வேற்றுமை
d) கபிலரைப் பரணர் புகழ்ந்தார் — 4. ஆறாம் வேற்றுமை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

14. வீணை என்ற இசைக்கருவி எத்தனை நரம்புகளை உடையதாகும்.
(A) ஏழு
(B) பதினான்கு
(C) பத்தொன்பது
(D) பத்து
(E) விடை தெரியவில்லை

15. தவறாக பொருந்தியுள்ள இணை எது?
(A) காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை
(B) விளம் முன் நேர் - இயற்சீர் வெண்டளை
(C) காய் முன் நிரை - கலித்தளை
(D) கனி முன் நிரை - ஒன்றா வஞ்சித்தளை
(E) விடை தெரியவில்லை

16. பொருத்துக:
a) நிரை நிரை நேர் - 1. தேமாங்காய்
b) நேர் நேர் நிரை - 2. கூவிளம்
c) நேர் நிரை - 3. தேமாங்கனி
d) நேர் நேர் நேர் - 4. கருவிளங்காய்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

17. 'பிடிபசி' இலக்கணக் குறிப்புத் தருக.
(A) இரண்டாம் வேற்றுமைத்தொகை
(B) ஆறாம் வேற்றுமைத்தொகை
(C) ஐந்தாம் வேற்றுமைத்தொகை
(D) நான்காம் வேற்றுமைத்தொகை
(E) விடை தெரியவில்லை

18. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?
(A) நக்கீரனார்
(B) உருத்திர சன்மனார்
(C) பெருந்தேவனார்
(D) பன்னாடு தந்த மாறன் வழுதி
(E) விடை தெரியவில்லை

19. ஐங்குறுநூறு பா வகை என்ன?
(A) அகவற்பா
(B) வெண்பா
(C) வஞ்சிப்பா
(D) கலிப்பா
(E) விடை தெரியவில்லை

20. ஐங்குறுநூற்றின் திணை ஆசிரியர்களை பொருத்துக:
(a) குறிஞ்சி - 1. பேயனார்
(b) முல்லை - 2. அம்மூவனார்
(c) மருதம் - 3. ஓதலாந்தையார்
(d) நெய்தல் - 4. கபிலர்

(e) பாலை 5. ஓரம்போகியார்

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 5 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 5 | 2 | 1 |
| (D) | 2 | 5 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

21. 'காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு' இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
(A) கலித்தொகை (B) திருக்குறள்
(C) புறநானூறு (D) பரிபாடல்
(E) விடை தெரியவில்லை

22. 'கருணாமிர்த சாகரம்' என்ற நூலை இயற்றியவர் யார்?
(A) திரு.வி.கலியாண சுந்தரனார் (B) அயோத்திதாச பண்டிதர்
(C) மீனாட்சி சுந்தரனார் (D) ஆபிரகாம் பண்டிதர்
(E) விடை தெரியவில்லை

23. சரியான கூற்றைக் கண்டறிக:
(I) குண்டலகேசி என்பது பௌத்த சமய சார்புடைய நூல் ஆகும்.
(II) புறத்திரட்டில் குண்டலகேசியின் பாடல்களாகப் 19 செய்யுள்களும் நீலகேசி உரையில் 180 பாக்களும் இன்று கிடைக்கின்றன.
(III) குண்டலகேசியின் ஆசிரியர் நாதகுத்தனார்
(IV) செல்வம் வரும்போது மகிழ்வதுமில்லை. வறுமையுற்றபோது வருந்துவதுமில்லை என்னும் நெறியை உணர்த்தும் பாடல் உள்ள நூல் குண்டலகேசி ஆகும்.
(A) I, II, III மட்டும் சரி (B) II, III, IV மட்டும் சரி
(C) I, III, IV சரி (D) I, II, III, IVசரி
(E) விடை தெரியவில்லை

24. விருத்தப்பாக்களாக அமைந்த எந்நூலின் பாடல்கள் கள்ளாமை, கொல்லமை, பொய்யாமை, இளமை நிலையாமை ஆகியன குறித்துப் பேசுகிறது?
(A) வளையாபதி (B) குண்டலகேசி
(C) சிலப்பதிகாரம் (D) சீவகசிந்தாமணி
(E) விடை தெரியவில்லை

25. சரியான கூற்றைக் கண்டறிக
(I) ஐம்பெரும் காப்பியங்களுள் இறுதியாக வைத்து எண்ணப்படுவது வளையாபதி ஆகும்.
(II) இது சமணக்காப்பியம் ஆகும்.
(III) இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.
(IV) இந்நூல் முழுமையும் இன்று கிடைக்கவில்லை. புறத்திரட்டுத்தொகை நூலில் வளையாபதியின் பாடல்களாக 66 செய்யுள்கள் காணப்படுகின்றன.
(A) II, III, IV சரி (B) I, II, III சரி
(C) III, IV மட்டும் சரி (D) I, II, III, IV சரி

(E) விடை தெரியவில்லை

26. எந்தநிலையிலும் மாந்தர்கள் கீழ்மையைத் தருகின்ற பொய்ப்பொருளைப் பற்றாது, சான்றோர் மொழிந்த துறவொழுக்கத்தைப் பின்பற்றுவதே சிறப்புடையது என்ற பாடல் பொருள் அமைந்த நூல் .......

(A) குண்டலகேசி
(B) வளையாபதி
(C) மணிமேகலை
(D) சிலப்பதிகாரம்
(E) விடை தெரியவில்லை

27. இன்மை யிளிவா முடைமை யுயிர்க்கச்சம்
மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுக்கும் புரையில் பொருளை
துன்னா தொழிந்தார் துறவோ விழுமிதே...... இப்பாடல் இடம் பெறும் நூல் எது?

(A) மணிமேகலை
(B) வளையாபதி
(C) சிலப்பதிகாரம்
(D) குண்டலகேசி
(E) விடை தெரியவில்லை

28. நவகோடி நாராயணனின் கதையைக் கூறும் காப்பியம் எது

(A) சீவகசிந்தாமணி
(B) வளையாபதி
(C) குண்டலகேசி
(D) மணிமேகலை
(E) விடை தெரியவில்லை

29. “கலம் தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரை சேர்க்குந்து” என்ற பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

(A) தொல்காப்பியம்
(B) பட்டினப்பாலை
(C) புறநானூறு
(D) அகநானூறு
(E) விடை தெரியவில்லை

30. கற்றவர்க்கு மட்டுமே விளங்குபவையாகவும் இலக்கியங்களில் மட்டுமே பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் ________ எனப்படும்.

(A) இயற்சொல்
(B) வடசொல்
(C) திசைச்சொல்
(D) திரிசொல்
(E) விடை தெரியவில்லை

31. “இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
துன்னூநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும்” என்ற பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) பதிற்றுப்பத்து
(B) பரிபாடல்
(C) நெடுநல்வாடை
(D) மணிமேகலை
(E) விடை தெரியவில்லை

32. “புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்” என்ற பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) பதிற்றுப்பத்து
(B) பரிபாடல்
(C) நெடுநல்வாடை
(D) மணிமேகலை
(E) விடை தெரியவில்லை

33. ‘பொதுவர்கள் பொலிஉளப் போர்அடிடுத்திடும் அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே’ - என்ற பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) கம்பராமாயணம் (B) இராவண காவியம்

(C) பெரியபுராணம் (D) சீவக சிந்தாமணி

(E) விடை தெரியவில்லை

34. ‘மணலிடை உலவிக் காற்றில்
சுரிகுழல் உலர்த்தும் தும்பி - இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) சீவக சிந்தாமணி (B) பெரியபுராணம்

(C) கம்பராமாயணம் (D) இராவண காவியம்

(E) விடை தெரியவில்லை

35. “தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம், கூடில்லாத பறவை” - என்று பாடியவர் யார்?

(A) பாரதியார் (B) பாரதிதாசன்

(C) ரசூல் கம்சதேவ் (D) வால்ட் விட்மன்

(E) விடை தெரியவில்லை

36. ‘உழவு உலகிற்கு அச்சாணி’ என்று கூறியவர் யார்?

(A) பாரதியார் (B) வள்ளலார்

(C) திருவள்ளுவர் (D) ஔவையார்

(E) விடை தெரியவில்லை

37. ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்று உழவை போற்றியவர் யார்?

(A) திருவள்ளுவர் (B) பாரதிதாசன்

(C) பாரதியார் (D) கவிமணி

(E) விடை தெரியவில்லை

38. “பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!” - என்று பாடியவர் யார்?

(A) பாரதியார் (B) பாரதிதாசன்

(C) கவிமணி (D) வாணிதாசன்

(E) விடை தெரியவில்லை

39. “ஒரு சின்ன மழலைச் சித்திரமோ
பால் மணம் கமழ வேண்டும்
அதன் பளிங்கு மேனியில்......... என்ற பாடல் வரிகளுடன்
தொடர்புடையவர் யார்?

(A) பாரதிதாசன் (B) முடியரசன்

(C) தேனரசன் (D) வாணிதாசன்

(E) விடை தெரியவில்லை

40. ஐரோப்பியக் கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் யார்?

(A) பாரதியார் (B) பாரதிதாசன்
(C) இராஜா இரவிவர்மா (D) கொண்டையராஜீ
(E) விடை தெரியவில்லை

41. தமது வீட்டில் 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தவர் யார்?
(A) பாரதியார் (B) பாரதிதாசன்
(C) டி.கே.சிதம்பரநாதர் (D) கி.வா. ஜகந்நாதன்
(E) விடை தெரியவில்லை

42. பின்வரும் கூற்றுகளுள் சரியானவற்றை கண்டறி:
1) பாவலரேறு பெருஞ்சித்தரனாரின் இயற்பெயர் துரை. மாணிக்கம்
2) தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகமெங்கும் பரப்பியவர் இவர்.
3) மாங்கனி இவர் இயற்றிய நூல்களுள் ஒன்றாகும்.
4) இவரது படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.
(A) 1, 2 சரி (B) 1, 4 சரி
(C) 3, 4 சரி (D) 2, 3 சரி
(E) விடை தெரியவில்லை

43. "சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்" என்று பாடியவர் யார்?
(A) பெருஞ்சித்திரனார் (B) பாரதிதாசன்
(C) க.சச்சிதானந்தன் (D) அ. முத்துலிங்கம்
(E) விடை தெரியவில்லை

44. 'எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?' என்று பாடியவர் யார்?
(A) பாரதியார் (B) பாவாணர்
(C) க.சச்சிதானந்தன் (D) பாவலரேறு
(E) விடை தெரியவில்லை

45. "நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்று கூறியவர் யார்?
(A) பாரதியார் (B) பாரதிதாசன்
(C) பாவாணர் (D) பாவலரேறு
(E) விடை தெரியவில்லை

46. கிராமியப் பின்புலத்தைக் களமாக்கிக் கொண்டு வட்டார மொழியில் கதை சொல்பவர்...........
(A) ராஜம் கிருஷ்ணன் (B) கி.ராஜநாராயணன்
(C) சார்வாகன் (D) ந.முத்துசாமி
(E) விடை தெரியவில்லை

47. மிக நவீனமான புனைவு நடையைக் கொண்டவர் யார்?
(A) தனுஷ்கோடி ராமசாமி (B) வேல ராமமூர்த்தி
(C) சுஜாதா (D) கந்தர்வன்
(E) விடை தெரியவில்லை

48. ஒரு சம்பவம், ஒரு மனநிலை, ஒரு சிக்கல் என ஒருபொருளைப் பற்றி மட்டுமே அமையும் ஓர்மை கொண்டது
(A) கவிதை
(B) சிறுகதை
(C) புதினம்
(D) கட்டுரை
(E) விடை தெரியவில்லை

49. 'பிரசாதம்' என்ற கதையின் ஆசிரியர் யார்?
(A) செல்வராஜ்
(B) சுந்தர ராமசாமி
(C) பாரதியார்
(D) ஜோடி குரூஸ்
(E) விடை தெரியவில்லை

50. செயப்பாட்டு வினைச்சொற்றொடரைக் கண்டறிக.
(A) நாற்காலி தச்சனால் செய்யப் பட்டது
(B) தச்சன் நாற்காலியைச் செய்தான்
(C) நாற்காலியைச் செய்தவன் தச்சன்
(D) நாற்காலியைத் தச்சன் செய்தான்
(E) விடை தெரியவில்லை

51. 'வள்ளைக்கு உறங்கும் வளநாட'
வள்ளை - என்பதன் பொருள் யாது?
(A) நெல் குத்தும் போது பெண்கள் பாடும் பாட்டு
(B) நடவு நடும் போது பெண்கள் பாடும் பாட்டு
(C) கும்மியடிக்கும் போது பெண்கள் பாடும் பாட்டு
(D) இவை எதுவும் இல்லை
(E) விடை தெரியவில்லை

52. 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
(A) திரு.வி.க.
(B) கவிமணி
(C) இரசிகமணி
(D) நாமக்கல் கவிஞர்
(E) விடை தெரியவில்லை

53. 'எற்பாடு' என்பது
(A) பகற்பொழுதின் பிற்பகுதி
(B) இரவுப்பொழுதின் முற்பகுதி
(C) பகற்பொழுதின் நடுப்பகுதி
(D) இரவுப்பொழுதின் பிற்பகுதி
(E) விடை தெரியவில்லை

54. தனியொரு அரசனுடைய பெயரைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மீது பாடப்பட்ட நூல்
(A) முத்தொள்ளாயிரம்
(B) நாலடியார்
(C) மணிமேகலை
(D) நெடுநல்வாடை
(E) விடை தெரியவில்லை

55. பழங்காலக் கருவிகள் செய்யப்பட்ட தொழிற்கூடமாக அகழாய்வில் கண்டறியப்பட்ட இடம்
(A) அத்திரம்பாக்கம்
(B) குடியம்
(C) நெய்வேலி
(D) வட மதுரை
(E) விடை தெரியவில்லை

56. கூற்று (A) : தமிழில் 'அணி' என்பதும் 'ஆணி' என்பதும் வேறுவேறு பொருள் கொண்ட சொற்கள்.
காரணம் (R) : சூழலுக்கு ஏற்பத்திரிபடைந்து ஒலிக்கும் ஒலி மாற்றொலி என்று பெயர் பெறும்.
(A) (A) சரி ஆனால் (R) தவறு
(B) (A) தவறு ஆனால் (R) சரி
(C) (A) சரி ஆனால் (R) என்பது (A) விற்குரிய விளக்கமன்று
(D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

57. 'இனிப் பாடுநரும் இல்லை பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை' யாரை யார் பாடியது?
(A) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப் பாடினியார்
(B) அதியமானை ஔவை
(C) கபிலரை வெள்ளிவீதியார்
(D) பாரியைப் பாணர் ஒருவர்
(E) விடை தெரியவில்லை

58. பழங்கற்காலக் கருவிகள் செய்யப் பயன்படுத்தப்பட்ட கற்கள் எவை?
(A) பசால்ட்
(B) டோலரெட்
(C) குவார்ட்சைட்
(D) டிராப்டைக்
(E) விடை தெரியவில்லை

59. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க
(A) தெளிவு, துகள், தாழை, தளை
(B) தளை, தாழை, துகள், தெளிவு
(C) தாழை, தளை, தெளிவு, துகள்
(D) துகள், தெளிவு, தளை, தாழை
(E) விடை தெரியவில்லை

60. வேர்ச்சொல்லை தெரிவு செய் : ஓடிய
(A) ஓடினான்
(B) ஓடு
(C) ஓடுதல்
(D) ஓடி
(E) விடை தெரியவில்லை

61. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல் :
(A) ஆதி காவியமென எண்ணப்படுவது வடமொழியில் வால்மீகி இராமாயணம்
(B) வடமொழியில் வால்மீகி இராமாயணம் ஆதி காவியமென எண்ணப்படுவது
(C) வடமொழியில் ஆதிகாவியமென எண்ணப்படுவது வால்மீகி இராமாயணம்
(D) காவியமென எண்ணப்படுவது வடமொழியில் ஆதி வால்மீகி இராமாயணம்
(E) விடை தெரியவில்லை

62. "99 மலர்களை" கொண்ட நூல் யாது?
(A) குறிஞ்சிப்பாட்டு
(B) பட்டினப்பாலை
(C) திருமுருகாற்றுப்படை
(D) பொருநராற்றுப்படை
(E) விடை தெரியவில்லை

63. “ஒறுத்தாரை ஒன்றாக வையாரே” - இத்தொடரில் “ஒறுத்தார்” என்பதன் இலக்கணக் குறிப்பு.
(A) முற்றெச்சம்
(B) தொழிற்பெயர்
(C) வினையாலணையும் பெயர்
(D) வினையெச்சம்
(E) விடை தெரியவில்லை

64. யாருடைய அறிவுரைப்படி ஆதிரையிடம் மணிமேகலை முதன்முதலில் பிச்சையேற்றாள்?
(A) கவுந்தியடிகள்
(B) மாதவி
(C) அறவணவடிகள்
(D) கண்ணகி
(E) விடை தெரியவில்லை

65. ஜி.யு.போப் தொகுத்த நூலின் பெயர்
(A) கலம்பகம்
(B) காவலூர்க் கலம்பகம்
(C) கதம்பமாலை
(D) தமிழ்ச்செய்யுட் கலம்பகம்
(E) விடை தெரியவில்லை

66. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண் இக்குறப்பாவில் அற்றம் என்பதன் பொருள் யாது?
(A) இறுதி
(B) அழிவு
(C) உண்மை
(D) ஒழுகுவது
(E) விடை தெரியவில்லை

67. மனுமுறை கண்ட வாசகம் என்ற நூலை எழுதியவர்
(A) இராமலிங்க அடிகளார்
(B) நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்
(C) கவிஞரேறு வாணிதாசன்
(D) உவமைக் கவிஞர் சுரதா
(E) விடை தெரியவில்லை

68. தமிழ்த்தாத்தா என அழைக்கப்படுபவர்?
(A) வள்ளுவர்
(B) உ.வே.சா
(C) வள்ளலார்
(D) மறைமலையடிகள்
(E) விடை தெரியவில்லை

69. பிரித்தெழுதுக
நன்கணியர்
(A) நன்கு + அணியர்
(B) நன் + அணியர்
(C) நான்கு + அணியர்
(D) நன்கு + கணியர்
(E) விடை தெரியவில்லை

70. ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ - என்பது எந்நூலின் புகழ்மிக்கத் தொடர்
(A) தேவாரம்
(B) திருவாசகம்
(C) திருமந்திரம்
(D) நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்
(E) விடை தெரியவில்லை

71. அரசினர் கீழத்திசைச் சுவடி நூலகம் அமைந்துள்ள இடம்
(A) சென்னை
(B) மதுரை
(C) சிதம்பரம்
(D) தஞ்சை
(E) விடை தெரியவில்லை

72. பின்வரும் தொடரிலுள்ள நிகழ்கால வினைமுற்றைத் தேர்வு செய்க?
(A) பழுத்த பழம்
(B) பழுக்கும் பழம்
(C) பழுக்கின்றது
(D) பழங்கள் பழுத்தன
(E) விடை தெரியவில்லை

73. கவுந்தியடிகள் எந்த மதத்தைச் சார்ந்த துறவி?
(A) சமணத் துறவி
(B) பௌத்தத் துறவி
(C) இஸ்லாமியத் துறவி
(D) சைவ துறவி
(E) விடை தெரியவில்லை

74. நாமக்கல் கவிஞருக்கு "பத்மபூஷண்" விருது வழங்கிச் சிறப்பித்தது யார்?
(A) நடுவணரசு
(B) மாநில அரசு
(C) ஆங்கில அரசு
(D) பிரெஞ்சு அரசு
(E) விடை தெரியவில்லை

75. 'கலிப்பா' .......................... ஓசையைக் கொண்டது
(A) செப்பல்
(B) அகவல்
(C) தூங்கல்
(D) துள்ளல்
(E) விடை தெரியவில்லை

76. பாம்பினைப் பற்றி ஆட்டாதே - உன்றன் பத்தினிமார்களைப் பழித்துக்காட்டாதே எனப் பாடிய சித்தர்
(A) தேரையர்
(B) பாம்பாட்டிச் சித்தர்
(C) போகர்
(D) கடுவெளிச்சித்தர்
(E) விடை தெரியவில்லை

77. "நோய்க்கு மருந்து இலக்கியம்" என்று கூறியவர் ?
(A) உ.வே. சாமிநாதர்
(B) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
(C) மறைமலையடிகள்
(D) கவிமணி தேசிக விநாயம் பிள்ளை
(E) விடை தெரியவில்லை

78. அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது
(a) குறளடி
(b) சிந்தடி
(c) நெடிலடி
(d) நேரடி
(A) c
(B) d
(C) a
(D) b
(E) விடை தெரியவில்லை

79. 'உலகப் பொதுமறை' எனப்போற்றப்படும் நூல் எது?
(A) திரிகடுகம்
(B) திருவள்ளுவமாலை

(C) திருக்குறள் (D) திருவிளையாடற்புராணம்
(E) விடை தெரியவில்லை

80. ‘ஞானக்கண்ணாடி’ என்ற சமய நூலை எழுதியவர் யார்?
(A) வீரமாமுனிவர் (B) கால்டுவெல்
(C) போப் (D) வேத நாயகம் பிள்ளை
(E) விடை தெரியவில்லை

81. பொருந்தாத தொடரைக் கண்டறிக.
(A) இழிந்த பிறப்பாய் விடும் (B) பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்
(C) ஏதம் படுபாக் கறிந்து (D) செல்வத்துப் பயனே ஈதல்
(E) விடை தெரியவில்லை

82. .................... மன்னன் யானைக்கட்சேய் மாந்தரஞ் ஆவார்.
(A) சேர (B) சோழ
(C) பாண்டிய (D) பல்லவ
(E) விடை தெரியவில்லை

83. பொருள் தருக.
சதுரங்கச்சேனை
(A) யானைப் படை (B) குதிரைப் படை
(C) தேர்ப் படை (D) நால்வகைப் படை
(E) விடை தெரியவில்லை

84. “உலகியலின் அடங்குகளுக்கும் துறைதோறும் நூற்கள்” ‘அடங்கு’ என்னும் வேர்ச்சொல்லின் வினை எச்சத்தை தேர்ந்து எழுதுக :
(A) அடங்கினான் (B) அடங்கி
(C) அடங்கிய (D) அடங்கியவர்
(E) விடை தெரியவில்லை

85. பொருளோடு பொருத்தமான வினையை இணைக்க :
(a) கூரை 1. வனைந்தான்
(b) ஓலை 2. கொய்தான்
(c) பானை 3. முடைந்தான்
(d) தேங்காய் 4. வேய்ந்தான்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

86. 'உச்சிமேற் புலவர் கொள்' என்ற அடைமொழியால் குறிக்கப்படுபவர்

(I) தொல்காப்பியர் (II) இவர் காப்பியம் படைத்தவர்
(III) இவர் ஒரு உரையாசிரியர் (IV) நச்சினார்க்கினியர்
(A) Iம், IIம் சரியானவை (B) Iம், IIIம் சரியானவை
(C) II, III, IV மூன்றுமே சரி (D) IIIம், IVம் சரியானவை
(E) விடை தெரியவில்லை

87. மணிமேகலையின் தோழி

(A) காய சண்டிகை (B) நீலி
(C) ஐயை (D) சுதமதி
(E) விடை தெரியவில்லை

88. 'DRAVIDIAN FEDERATION' என்னும் ஆங்கில இதழை நடத்திய தமிழறிஞர்

(A) சி. இலக்குவனார் (B) ஜே.எம். நல்லாசாமிப்பிள்ளை
(C) மறைமலையடிகள் (D) திரு.வி.கல்யாணசுந்தரனார்
(E) விடை தெரியவில்லை

89. மருதத்திணையின் பறை எது?

(A) தொண்டகம் (B) மணமுழா
(C) ஏறு கோட்பறை (D) மீன் கோட்பறை
(E) விடை தெரியவில்லை

90. 'கொம்பினை யொத்த மடப்பிடி' யார்?

(A) சீதை (B) பாஞ்சாலி
(C) துச்சலை (D) மந்தாரை
(E) விடை தெரியவில்லை

91. பின்வருவனவற்றைப் பொருத்துக:

(a) குயில்பாட்டு 1. அப்துல் ரகுமான்
(b) அழகின் சிரிப்பு 2. சுரதா
(c) துறைமுகம் 3. பாரதியார்
(d) பால்வீதி 4. பாரதிதாசன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

92. முதலிலார்க்(கு) ஊதிய மில்லை, மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை இக்குறளில் பயின்று வந்துள்ள அணி யாது?

(A) ஏகதேச உருவக அணி (B) உவமையணி
(C) எடுத்துக்காட்டு உவமையணி (D) பிறிதுமொழிதல் அணி

(E) விடை தெரியவில்லை

93. பல்லவர் காலச் சிற்பிகள் எவ்வகை உருவங்களை செதுக்குவதில் கைதேர்ந்திருந்தனர்

(A) குதிரை
(B) யானை
(C) கடவுள்
(D) மனிதன்
(E) விடை தெரியவில்லை

94. முதன் முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டவர் யார்?

(A) குணங்குடி மஸ்தான் சாகிபு
(B) ஆறுமுக நாவலர்
(C) வீரமாமுனிவர்
(D) ரா.பி. சேதுப்பிள்ளை
(E) விடை தெரியவில்லை

95. பிழையற்றத் தொடரை எழுதுக.

(A) அவன் கவிஞன் அல்ல
(B) அவன் கவிஞன் அன்று
(C) அவன் கவிஞன் அல்லன்
(D) அவன் கவிஞன் அல்லர்
(E) விடை தெரியவில்லை

96. சீத்தலை சாத்தனாருக்கு தொடர்பில்லாத தொடரைக் கண்டறிக.

(A) கூல வாணிகம் செய்தவர்
(B) மதுரையில் வாழ்ந்தவர்
(C) முதற்சங்கப் புலவர்களில் ஒருவர்
(D) இளங்கோவடிகளின் உற்ற நண்பர்
(E) விடை தெரியவில்லை

97. இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் ......................
பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடு.

(A) படை
(B) பொழுது
(C) செல்வம்
(D) பகை
(E) விடை தெரியவில்லை

98. மணிமேகலையில் விருச்சிக முனிவரால் பசிநோய் சாபம் பெற்றவள் யார்?

(A) சுதமதி
(B) மணிமேகலை
(C) ஆதிரை
(D) காயசண்டிகை
(E) விடை தெரியவில்லை

99. 'சீர்திருத்தக் காப்பியம்' என்று பாராட்டப்படுவது

(A) சிலப்பதிகாரம்
(B) மணிமேகலை
(C) வளையாபதி
(D) குண்டலகேசி
(E) விடை தெரியவில்லை

100. "திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்" - என்று செம்மொழிக்கு இலக்கணம் வகுத்தவர்

(A) பரிதிமாற் கலைஞர்
(B) நாமக்கல் கவிஞர்
(C) பாரதியார்
(D) பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

101. “இன்டோமிட்டபிள் எ உர்க்கிங் வுமன்ஸ் நோட்ஸ் ஆன் லைஃப் ஒர்க் அண்ட் லீடர்ஷிப்” என்ற புத்தகம் யாருடைய சுயசரிதையை குறிக்கிறது?

(A) ஜும்பா லஹிரி
(B) அருந்ததி பட்டாச்சார்யா
(C) கிரண் தேசாய்
(D) நிகிதா லால்வாணி
(E) விடை தெரியவில்லை

‘‘Indomitable A working woman’s notes on life work and leadership’’ is the autobiography of?

(A) Jumpa Lahiri
(B) Arundhati Battacharya
(C) Kiran Desai
(D) Nikita Lalwani
(E) Answer Not Known

102. இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான முதல் பேட்மின்டன் பயிற்சி நிலையம் எங்கு நிறுவப்பட்டுள்ளது?

(A) லக்னோ
(B) தெலுங்கானா
(C) பெங்களூர்
(D) டெல்லி
(E) விடை தெரியவில்லை

India’s first Para-badminton academy has been set up in?

(A) Lucknow
(B) Telangana
(C) Bangalore
(D) Delhi
(E) Answer Not Known

103. இந்தியாவின் மிகப்பரிய ஒற்றை அச்சு சூரியசக்தி இணைப்பான 300 மெகா வாட் சோலார் ஆலை எங்கு இயங்கத் தொடங்கியுள்ளது?

(A) தோலேரா
(B) அம்ரேலி
(C) ஆரவல்லி
(D) பொடாட்
(E) விடை தெரியவில்லை

India’s largest Single-axis Solar tracker system, a 300 MW solar plant has commissioned in?

(A) Dholera
(B) Amreli
(C) Aravalli
(D) Botad
(E) Answer Not Known

104. இந்திய விமானப் படையின் காட்சிப் பீடத்தில் பங்கேற்ற 2வது பெண் விமானியும் முதல் பெண் ரஃபேல் விமானி யார்?

(A) அவனி சதுர்வேதி
(B) பாவ்னா காந்தி
(C) சிவாங்கி சிங்
(D) ஆரோஹி பண்டிட்
(E) விடை தெரியவில்லை

Who is the second women pilot to participate in the Indian Air force Tableau and India’s first women Rafale Pilot?

(A) Avani Chaturvedi
(B) Bhawna Kanth
(C) Shivangi Singh
(D) Aarohi Pandit
(E) Answer Not Known

105. இந்திய ராணுவப்படையின் துணை தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

(A) பி.எஸ்.ராஜூ
(B) நிர்மல் சந்த்

(C) சண்டி பிரசாத் (D) சந்திர சேகர்
(E) விடை தெரியவில்லை
Who has been appointed as new vice chief of Army Staff?
(A) B.S.Raju (B) Nirmal Chand
(C) Chandi Prasad (D) Chandra Sekar
(E) Answer Not Known

106. சரியான பொருத்தத்தினை உடையவைகளைக் கண்டறிக,
I. நொதிகள் - உயிரிய கிரியா ஊக்கிகள்
II. டி.என்.ஏ - நியூக்ளிக் அமிலம்
III. இன்சுலின் - ஹார்மோன்
IV. வைட்டமின் E - நீரில் கரையும் வைட்டமின்
(A) II மட்டும் (B) I மட்டும்
(B) I, II, மற்றும் IV (D) I, II மற்றும் III
(E) விடை தெரியவில்லை
Find out the correct matches :
I. Enzymes - Biological catalysts
II. DNA - Nucleic acid
III. Insulin - Hormone
IV. Vitamin E - Water soluble vitamin
(A) II only (B) I only
(B) I, II, and IV (D) I, II and III

107. ஒரு சிறுவனின் தொண்டைப் பகுதி அகன்று குரல் மாற்றம் ஏற்படுகின்றது? மேலும் அவனுடைய முகத்தில் ரோம வளர்ச்சி காணப்படுகின்றது. இதற்கு காரணமான ஹார்மோன்
(A) இன்ஹிபிடின் (B) டெஸ்டோஸ்டீரோன்
(C) ஈஸ்டிரோஜென் (D) புரோஜெஸ்டிரோன்
(E) விடை தெரியவில்லை
A boys larynx enlarges leading to deepening of voice and he shows hair growth over his face. This is due to the hormone
(A) Inhibition (B) Testosterone
(C) Oestrogen (D) Progesteron

108. பின்வருவனவற்றை சரியான வரிசையில் எழுதுக,
I. துணை வகுப்பு : மோனோகாட்டிலிடனே
II. குடும்பம் : யூபோபியேசி
III. வகுப்பு : டைகாட்டிலிடனே
IV. வரிசை : யுனிசெக்ஸ்வேலிஸ்
(A) III-I-IV-II (B) I-II-III-IV
(C) IV-III-II-I (D) II-III-I-IV
(E) விடை தெரியவில்லை
Arrange the following in correct order :
I. Sub class : Monochlamydeae
II. Family : Euphorbiaceae

III. Class : Dicotyledonae
IV. Series : Unisexuales

(A) III-I-IV-II
(B) I-II-III-IV
(C) IV-III-II-I
(D) II-III-I-IV
(E) Answer Not Known

109. உலகில் முதன்முதலில் கண்டறியப்பட்ட எதிர் நுண்ணுயிரி மருந்து எது ?
(A) ஆம்ப்பிசிலின்
(B) டெட்ராசைக்கிளின்
(C) பென்சிலின்
(D) ஸ்ட்ரெப்டோமைசின்
(E) விடை தெரியவில்லை

What is the first antibiotic discovered in the world?
(A) Ampicillin
(B) Tetracyclin
(C) Penicillin
(D) Streptomycin
(E) Answer Not Known

110. ஒளிச்சேர்க்கை நடைபெறும் முக்கிய தாவர உறுப்பு
(A) வேர்கள்
(B) தண்டு
(C) இலைகள்
(D) மலர்கள்
(E) விடை தெரியவில்லை

Which part of the plant is most important in photosynthesis?
(A) root
(B) stem
(C) leaves
(D) flowers
(E) Answer Not Known

111. மரபுப் பொறியியல் தொழில் நுட்பங்களை கையாண்டு சுவிட்சர்லாந்து நாட்டு போட்ரிகல், ஜெர்மனி நாட்டு பீட்டர்பேயிர் ஆகியவர்கள் கரோடினை உற்பத்தி செய்வதற்கு காரணமான ஜீணை பிரித்தெடுத்த தாவரம்
(A) ஒரைசா சடைவா
(B) அவினா சடைவா
(C) கிரைசாந்திமம்
(D) டாஃபடில்
(E) விடை தெரியவில்லை

Employing genetic engineering techniques, Potrykus of Switzerland and Peter Beyer of Germany transferred genes of Carotene from
(A) Oryza Sativa
(B) Avena Sativa
(C) Chrysanthimum
(D) Daffodils
(E) Answer Not Known

112. ஒரு கன சதுரத்தின் கன அளவு 729 செ.மீ$^3$ எனில் அதன் மூலைவிட்டம் எவ்வளவு
(A) $9\sqrt{2}$ செ.மீ
(B) $9\sqrt{3}$ செ.மீ
(C) 18 செ.மீ
(D) $18\sqrt{3}$ செ.மீ
(E) விடை தெரியவில்லை

The volume of the cube is 729 cm$^3$. What is the length of the diagonal
(A) $9\sqrt{2}$ cm
(B) $9\sqrt{3}$ cm

(C) 18 cm
(D) $18\sqrt{3}$ cm
(E) Answer Not Known

113. ஷர்மாவின் தற்போதைய வயது அவருடைய தந்தையின் வயதில் கால் பாகமாகும். ஆறு ஆண்டுக்கு முன்பு தந்தையின் வயதானது ஷர்மாவின் வயதைப் போல் ஏழு மடங்காக இருந்தது. அவர்களின் தற்போதைய வயதைக் காண்க.
(A) 8, 32
(B) 10, 40
(C) 12, 48
(D) 14, 56
(E) விடை தெரியவில்லை

Now Sharma age is quarter as old as his father. Six years ago the father's age was seven times as old as Sharma. Find their present ages
(A) 8, 32
(B) 10, 40
(C) 12, 48
(D) 14, 56
(E) Answer Not Known

114. ஒரு கடன் தொகை மீது 2 ஆண்டுகளில் 8% ஆண்டு வட்டி வீதம் 2 ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் உள்ள வித்தியாசம் ₹ 40 எனில் அத்தொகை
(A) ₹ 6,250
(B) ₹ 6,000
(C) ₹ 6,150
(D) ₹ 6,200
(E) விடை தெரியவில்லை

The difference between C.I. and S.I. for two years on a sum of money lent at 8% p.a. is ₹ 40. Then the sum of money lent is
(A) ₹ 6,250
(B) ₹ 6,000
(C) ₹ 6,150
(D) ₹ 6,200
(E) Answer Not Known

115. $\frac{a+b}{c}=\frac{b+c}{a}=\frac{c+a}{b}=k$, எனில் $k$ ன் மதிப்பு

(A) 0
(B) 1
(C) 2
(D) a + b +c
(E) விடை தெரியவில்லை

If $\frac{a+b}{c}=\frac{b+c}{a}=\frac{c+a}{b}=k$, Then the value of $k$ is

(A) 0
(B) 1
(C) 2
(D) a + b +c
(E) Answer Not Known

116. ஒரு கடிகாரத்தில், மணி காட்டும் முள்ளின் கோணம் 12 மணிக்கு என்னவாக இருக்கும்?
(A) $360^{\circ}$
(B) $180^{\circ}$
(C) $90^{\circ}$
(D) $30^{\circ}$
(E) விடை தெரியவில்லை

In a clock the angle traced by the hour hand in 12 hours is

(A) 360° (B) 180°

(C) 90° (D) 30°

(E) Answer Not Known

117. 100 எண்களின் சராசரி 40 என்று காணப்பட்டது. கணக்கிடும் நேரத்தில் 30 மற்றும் 27 என்ற இரு விவரங்கள் 3 மற்றும் 72 எனத்தவறுதலாக எடுத்துக்கொள்ளப்பட்டது என தெரிய வந்தது எனில் சரியான சராசரியைக் காண்க.

(A) 39.82 (B) 40.18

(C) 41 (D) 42.5

(E) விடை தெரியவில்லை

Mean of 100 observations is found to be 40. At the time of computation two items were wrongly taken as 3 and 72 instead of 30 and 27. find the correct Mean

(A) 39.82 (B) 40.18

(C) 41 (D) 42.5

(E) Answer Not Known

118. இரண்டு எண்களின் மீச்சிறு பொது வரு என் 2079 மீப்பெரு பொது வகு எண் 27. அவற்றில் முதல் எண் 189 எனில் 2வது எண் யாது?

(A) 179 (B) 197

(C) 297 (D) 279

(E) விடை தெரியவில்லை

The L.C.M of two numbers is 2079 then HCF is 27 If the 1st number 189, then the 2nd number is

(A) 179 (B) 197

(C) 297 (D) 279

(E) Answer Not Known

119. ஒரு வியாபாரி ஒரு பொருளை ரூ.1,200க்கு வாங்கினார். பின்பு அதன் அடக்கவிலைக்கு மேல் 30% உயர்த்தி, குறித்த விலை ஆக்கினார். இதற்கு 20% தள்ளுபடி கொடுத்து விற்றார் எனில், விற்பனை விலை மற்றும் இலாப சதவீதம் காண்க.

(A) ரூ.1,560, 6% (B) ரூ.1,428, 4%

(C) ரூ. 1,248, 4% (D) ரூ.1,650, 6%

(E) விடை தெரியவில்லை

A trader buys an article for Rs. 1,200 and marks it 30% above the cost price. He then sells it after allowing a discount of 20%. Find the selling price and profit percent.

(A) Rs. 1,560, 6% (B) Rs. 1,428, 4%

(C) Rs. 1,248, 4% (D) Rs. 1,650, 6%

(E) Answer Not Known

120. ஒரு வகுப்பில் மாணவர்கள், மாணவியர்கள் விகிதம் 4:5. மாணவர்களின் எண்ணிக்கை 20 எனில் மாணவியரின் எண்ணிக்கை

(A) 15 (B) 20

(C) 25 (D) 26

(E) விடை தெரியவில்லை

The ratio of boys to girls in a class is 4:5. If the number of boys is 20, then the number of girls is

(A) 15 (B) 20
(C) 25 (D) 26
(E) Answer Not Known

121. X, Y, Z தனித்தனியே ஒரு வேலையை முடிக்க 6 மணிநேரம், 4 மணி நேரம், 12மணி நேரம் எடுத்துக் கொள்கின்றனர். மூவரும் சேர்ந்து அவ்வேலையை முடிக்க எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வர் ?

(A) 3 hours (B) 5 hours
(C) 6 hours (D) 2 hours
(E) விடை தெரியவில்லை

X and Y and Z can independently complete a piece of work in 6 hours, 4 hours and 12 hours respectively. If they work together how much time will they take to complete that piece of work ?

(A) 3 hours (B) 5 hours
(C) 6 hours (D) 2hours
(E) Answer Not Known

122. ஒரு மனிதன் 114 மீ இடைவெளியில் ஒரு சிறுவனின் பின்னால் 21 மீ/நி என்ற வேகத்தில் ஓடிவருகிறார். சிறுவன் 15மீ/நி என்ற வேகத்தில் ஓடினால் இருவரும் எப்பொழுது சந்தித்துக் கொள்வர்

(A) 18 நிமிடங்கள் (B) 19 நிமிடங்கள்
(C) 20 நிமிடங்கள் (D) 36 நிமிடங்கள்
(E) விடை தெரியவில்லை

A man is 114 metres behind a boy. The man runs 21 metres in a minute and the boy runs 15 metres in a minute. In what time they will meet

(A) 18 minutes (B) 19 minutes
(C) 20 minutes (D) 36 minutes
(E) Answer Not Known

123. சுருக்குக : 4 - [6 - {12 - (10 - 8 + 6)}]

(A) 4 (B) 2
(C) 6 (D) 8
(E) விடை தெரியவில்லை

Simplify : 4 - [6 - {12 - (10 - 8 + 6)}]

(A) 4 (B) 2
(C) 6 (D) 8
(E) Answer Not Known

124. ஒரு தொகை 9 வருடங்களில் இரட்டிப்பாகின்றது எனில், வட்டி விகிதமானது

(A) $9\frac{1}{9}\%$ (B) $10\frac{1}{9}\%$

(C) $11\frac{1}{9}\%$ (D) $12\frac{1}{9}\%$

(E) விடை தெரியவில்லை

If a sum of amount double in 9 years then the rate of interest per annum

(A) $9\frac{1}{9}\%$ (B) $10\frac{1}{9}\%$

(C) $11\frac{1}{9}\%$ (D) $12\frac{1}{9}\%$

(E) Answer Not Known

125. முதல் 7 இயல் எண்களின் திட்டவிலக்கம் எது ?

(A) 7 (B) $\sqrt{7}$

(C) 4 (D) 2

(E) விடை தெரியவில்லை

Standard deviation of first 7 natural numbers is

(A) 7 (B) $\sqrt{7}$

(C) 4 (D) 2

(E) Answer Not Known

126. ஒரு பகடையை ஒரு முறை எறியும் பொழுது கிடைக்கும் எண் 3 ன் மடங்காக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(A) 1/2 (B) 1/3

(C) 1/6 (D) 2/3

(E) விடை தெரியவில்லை

In a single throw of a die, the probability of getting a multiple of 3 is

(A) 1/2 (B) 1/3

(C) 1/6 (D) 2/3

(E) Answer Not Known

127. ஒரு கிராமத்தில் 15% குழந்தைகள், 40% பெண்கள், கிராமத்தின் மொத்தம் 900 மக்கள் உள்ளனர் எனில் ஆண்கள்:பெண்கள்: குழந்தைகள் என்ற விகிதத்தை காண்க.

(A) 9:7:4 (B) 9:8:3

(C) 7:9:4 (D) 8:9:3

(E) விடை தெரியவில்லை

In a village, 15% are children, 40% are women. There are 900 people in the village what is the ratio Meri: Women: Children?

(A) 9:7:4 (B) 9:8:3

(C) 7:9:4 (D) 8:9:3

(E) Answer Not Known

128. ஒரு நாற்கரத்தின் நீளம் 20 செ.மீ, எதிர் செங்குத்து உயரம் 7 செ.மீ மற்றும் 10 செ.மீ இருந்தால் அவற்றின் பரப்பளவு காண்க.

(A) 160 $cm^2$ (B) 110 $cm^2$

(C) 100 $cm^2$ (D) 170 $cm^2$

(E) விடை தெரியவில்லை

Calculate the area of the quadrilateral whose length is 20 cm and perpendicular distance to the diagonal from opposite vertices be 7 cm and 10 cm

(A) 160 $cm^2$ (B) 110 $cm^2$

(C) 100 $cm^2$ (D) 170 $cm^2$

129. TWITTER என்பது SUHTUFS என குறியீடு பெற்றால் GLITTER என்பது எவ்வாறு குறியீடு செய்யப்பட வேண்டும்?

(A) FKHTUFS (B) FSHTUFS

(C) FHKTUFS (D) FSKTUES

(E) விடை தெரியவில்லை

If TWITTER is coded as SUHTUFS then GLITTER is coded as

(A) FKHTUFS (B) FSHTUFS

(C) FHKTUFS (D) FSKTUES

(E) Answer Not Known

130. 6 பேர், ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்து, ஒரு வாரத்திற்கு ரூ 8,400 சம்பாதிக்கின்றனர். எனில் 9 பேர், ஒரு நாளைக்கு 6 மணி நேரம் வேலை செய்து ஒரு வாரத்திற்கு எவ்வளவு சம்பாதிப்பார்?

(A) ரூ.8,400 (B) ரூ. 9,450

(C) ரூ.16,200 (D) ரூ. 16,800

(E) விடை தெரியவில்லை

If 6 men working 8 hours per day and earn Rs. 8,400 per week, then 9 men working 6 hours per day will earn per week:

(A) Rs. 8,400 (B) Rs. 9,450

(C) Rs. 16,200 (D) Rs. 16,800

(E) Answer Not Known

131. பின்வரும் பகடைகளின் தோற்றத்தி லிருந்து '2'க்கு எதிரில் வரும் எண் யாது?




(A) 3 (B) 6

(C) 4 (D) 5

(E) விடை தெரியவில்லை

Which number comes opposite on 2?




(A) 3 (B) 6

(C) 4 (D) 5

(E) Answer Not Known

132. $1+3+5+....$ 25 உறுப்புகள் வரை உள்ள தொடரின் கூடுதல்

(A) 600 (B) 625
(C) 650 (D) 675
(E) விடை தெரியவில்லை

The sum of the series 1+ 3 +5+ .... to 25 terms is

(A) 600 (B) 625
(C) 650 (D) 675
(E) Answer Not Known

133. p, q, r, s, t என்பன கூட்டுத் தொடர் வரிசையில் இருப்பின் p - 4q + 6r - 4s + t =

(A) 1 (B) 2
(C) 3 (D) 0
(E) விடை தெரியவில்லை

If p, q, r, s, t are in AP. then the value of p - 4q + 6r - 4s + t is

(A) 1 (B) 2
(C) 3 (D) 0
(E) Answer Not Known

134. 3 எண்கள் 1:2:3 என்ற விகிதத்தில் உள்ளன. அவற்றின் மீ.பெ.வ 12 எனில் அவ்வெண்கள் யாவை?

(A) 12,24,36 (B) 10,20,30
(C) 5,10,15 (D) 4,8,12
(E) விடை தெரியவில்லை

Three numbers are in the ratio 1 : 2 : 3 and their HCF is 12. The numbers are

(A) 12,24,36 (B) 10,20,30
(C) 5,10,15 (D) 4,8,12
(E) Answer Not Known

135. 5%-க்கு 3%-ன் விழுக்காடு என்ன?

(A) 70% (B) 50%
(C) 40% (D) 60%
(E) விடை தெரியவில்லை

What percent of 3% in 5%?

(A) 70% (B) 50%
(C) 40% (D) 60%
(E) Answer Not Known

136. $\frac{x^2-2x}{x^2+2x}\times\frac{3x+6}{x-2}$ ன் மதிப்பு

(A) $3x$ (B) 3
(C) $3x+2$ (D) $x-2$
(E) விடை தெரியவில்லை

The value of $\frac{x^2-2x}{x^2+2x} \times \frac{3x+6}{x-2}$

(A) $3x$ (B) 3

(C) $3x+2$ (D) $x-2$

(E) Answer Not Known

137. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தொடர்பான சரியான கூற்றை/ கூற்றுகளை தேர்வு செய்யவும்.

(a) அது ஓர் குறிப்பிட்ட கால வரையறைக்கு உரித்தானது அல்ல.

(b) அது "பொருட்கள்" தொடர்பான ஓர் அளவீடேயாகும். "சேவை" தொடர்பானது அல்ல.

(c) அது பணம் சாராத அளவீடாகும்.

(A) a சரி b மற்றும் c தவறு (B) b மற்றும் c, சரி a தவறு

(C) a, b, c தவறு (D) b சரி a மற்றும் c தவறு

(E) விடை தெரியவில்லை

What are the facts related to defining GDP?

(a) It is not for a specific period of time.

(b) It measures only goods and not services.

(c) It is a non monetary measure.

(A) a is correct, b and c are wrong (B) b and c are correct, a is wrong

(C) a, b, c are wrong (D) b is correct, a and c are wrong

(E) Answer Not Known

138. நிதி ஆயோக்கின் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) தொடர்பான மதிப்பீடு அறிக்கையின் படி கீழ்காணும் எந்த கூற்று/ கூற்றுகள் சரியானது/ சரியானவை ஆகும்.

(a) "குறைந்தபட்ச ஆதரவு விலை" விதைப்புக் காலத்திற்கு முன்பே அறிவிக்கப்படும்.

(b) "குறைந்தபட்ச ஆதரவு விலை"யின் நோக்கம் விவசாயிகளுக்கு விலை உத்தரவாதம் அளிப்பது ஆகும்.

(c) உலகமயமாக்கலினால் ஏற்பட்டுள்ள தங்கு தடையற்ற வர்த்தகத்தின் விளைவாக விவசாய பொருள்களின் விலையில் ஏற்படும் தேவையற்ற ஏற்ற இறக்கங்களில் இருந்து விவசாயிகளை காப்பது முக்கியமல்ல.

(A) (a), (c) மட்டும் (B) (a), (b) மட்டும்

(C) (b) மட்டும் (D) (c) மட்டும்

(E) விடை தெரியவில்லை

According to the evaluation report of Niti Ayog related to Minimum support Prices (MSP), which of the following statement (s) is/are correct ?

(a) MSP is declared before the sowing season.

(b) The idea behind MSP is to give guaranteed prices to the farmers and save them from price fluctuations.

(c) With globalization resulting in free trade in agricultural commodities, it is not important to protect the farmers from the unwarranted fluctuations in prices.

(A) (a), (c) only (B) (a), (b) only

(C) (b) only (D) (c) only

(E) Answer Not Known

139. பின்வரும் விவசாய முறைகளில் எது சூழல் நட்பு ?

(A) கரிம வேளாண்மை
(B) சாகுபடி மாற்றம்
(C) அதிக மகசூல் தரும் வகைகளின் சாகுபடி
(D) கண்ணாடி வீடுகளில் வளரும் தாவரங்கள்
(E) விடை தெரியவில்லை

Which one of the following agricultural practices is ecofriendly ?

(A) Organic farming
(B) Shifting cultivation
(C) Cultivation of high yielding varieties
(D) Growing plants in glass house
(E) Answer Not Known

140. பின்வரும் கூற்றை கவனி.

நுகர்வு சார்பை தூண்டுகின்ற அகவய ஆவன காரணிகளாவன

1. முன்னெச்சரிக்கை நோக்கம்
2. நீர்மை தன்மை நோக்கம்
3. பேராசை நோக்கம்
4. தலையிடாக் கொள்கை

மேல்காணும் கூற்றுகளில் சரியானவற்றை தேர்வு செய்யவும்.

(A) 3 மற்றும் 4
(B) 1, 2 மற்றும் 3
(C) 1, 2 மற்றும் 4
(D) 1 மற்றும் 4
(E) விடை தெரியவில்லை

Consider the following statement.

The objective factors for determinants of consumption function are.

1.Motive of precaution
2.Motive of liquidity
3.Motive of avarice
4.laissez-faire policy

Among the above, select the correct statement(s)

(A) 3 and 4
(B) 1, 2 and 3
(C) 1, 2 and 4
(D) 1 and 4
(E) Answer Not Known

141. "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று சென்னை ஏன் அழைக்கப்படுகிறது?

(A) ஜவுளித் தொழில் இருப்பதனால்
(B) மோட்டார் வாகனத் தொழில் இருப்பதனால்
(C) தோல் தொழில் இருப்பதனால்
(D) திரைப்படத் தொழில் இருப்பதனால்
(E) விடை தெரியவில்லை

Why Chennai is called as "Detroit of Asia"?

(A) Due to the presence of Textile Industry
(B) Due to the presence of Automobile Industry
(C) Due to the presence of Leather Industry
(D) Due to the presence of Film Industry
(E) Answer Not Known

142. ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா எந்த ஆண்டு தனது செயல்பாடுகளை தொடங்கியது?

(A) 1786
(B) 1843
(C) 1935
(D) 1950
(E) விடை தெரியவில்லை

When did Reserve Bank of India Commence its operations ?

(A) 1786
(B) 1843
(C) 1935
(D) 1950
(E) Answer Not Known

143. எந்த திட்டத்தில் தொடர்ந்து முன்னேறுவதற்கான சரியான நோக்கத்தை நிர்ணயித்தன " விரைவான வளர்ச்சியை நோக்கி மற்றும் அதிக உள்ளடங்கிய வளர்ச்சி "

(A) 10 -வது திட்டம் (B) 9- வது திட்டம்

(C) 11- வது திட்டம் (D) 12- வது திட்டம்

(E) விடை தெரியவில்லை

Which plan had set the correct goal in the form of moving " Towards faster and more inclusive growth?

(A) 10th plan (B) 9 th plan

(C) 11 th plan (D) 12 th plan

(E) Answer Not Known

144. கீழே கொடுக்கப்பட்டுள்ள நதிகளை நிலப்பகுதிகளுடன் சரியாக பொருத்துக:

| பட்டியல் I (ஆறுகள் /துணையாறுகள்) | பட்டியல் II (நிலப்பகுதிகள்) |
|---|---|
| a) சம்பல் | 1. கழிமுக பகுதி |
| b) காவேரி | 2. ஜோக் நீர்வீழ்ச்சி |
| c) நர்மதா | 3. கரடுமுரடான நிலம் |
| d) ஷர்வதி | 4. முகத்துவாரம் |

குறியீடு:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

Match List I with list II correctly and select your answer using the codes given below:

| List I (Rivers / Tributaries) | List II (Landforms) |
|---|---|
| (a) Chambal | 1. Delta |
| (b) Cauvery | 2. Jog water falls |
| (c) Narmadha | 3. Bad Lands |
| (d) Sharvathi | 4. Estuary |

Codes:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) Answer Not Known

145. புவி மேற்பரப்பின் உயரம் மற்றும் தாழ்வினை சராசரி கடல் மட்டத்திலிருந்து காட்டப் பயன்படும் வரைபடம்

(A) ஹிப்சோமெட்ரிக் வளைகோடு (B) லாரன்ஸ் வளைகோடு

(C) கிளைனோ கிராபிக் வளைகோடு (D) அலைவெண் வளைகோடு

(E) விடை தெரியவில்லை

The diagram used to show the distribution of earth's solid surface at elevations above and below the mean sea level is

